மதுரை மாவட்டம் 07-11-24

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு

**வகுப்பு: 11**

## வணிகவியல்

**நேரம்: 1.30 மணி** **மொத்த மதிப்பெண்கள்: 45**

பிரிவு – I **(10*1=10)**

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. சுய உதவிக் குழுக்கள் தங்கள் சேமிப்புத் தொகையை வசூலித்து--------------- ஏற்படுத்த வேண்டும்.
   அ) பொது நிதி ஆ)குழு தொகுப்பு நிதி இ)குழு நிதி ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை
2. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டு சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு
   அ) 2004 ஆ) 2007 இ) 2006 ஈ) 2008
3. வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவது------------
   அ) இறக்குமதி ஆ) ஏற்றுமதி இ) மறு ஏற்றுமதி ஈ) மீண்டும்ஏற்றுமதி
4. உள்நாட்டு வியாபாரத்தின் நோக்கம் ----------------.
   அ) வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஆ) அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை பொருளாதார ரீதியாக வழங்குதல் இ) தேசிய வருமானத்தை உயர்த்த ஈ) அனைத்து வகையான பொருட்களையும் பெற.
5. வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?
   அ) மொத்த விற்பனையாளர் ஆ) உற்பத்தியாளர் இ) சில்லறை விற்பனையாளர் ஈ) வாடிக்கையாளர்
6. வாங்குபவரையும் விற்பவரையும் ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொள்பவர்_______________.
   அ) தரகர் ஆ) கழிவு முகவர் இ) விற்பனை முகவர் ஈ) இருப்பு வைத்திருப்பவர்
7. சில்லறை விற்பனையாளர்கள் ___________ அளவில் பொருள்களை கையாள்கின்றனர்.
   அ) சிறிய ஆ) பெரிய இ) நடுத்தர ஈ) வரையறுக்கப்பட்ட
8. உள்நாட்டிலிருந்து பொருட்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டால் அது _______ எனப்படும்.
   அ) உள்நாட்டு வியாபாரம் ஆ) ஏற்றுமதி இ) அயல்நாட்டு வியாபாரம் ஈ) இணைவினை
9. கூற்று 1: சரக்காணை என்பது சரக்கை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஆதாரம் ஆகும்.
   கூற்று 2: சரக்காணை இரண்டு நகல்களில் தயாரிக்கப்பட்டு ஒரு நகலை ஏற்றுமதியாளருக்கு அனுப்பிவிட்டு மற்றொன்றை இறக்குமதியாளர் தன்னிடம் வைத்துக்கொள்வார்.
   அ) கூற்று 1 சரி மற்றும் கூற்று 2 தவறு ஆ) கூற்று 1 தவறு மற்றும் கூற்று 2 சரி
   இ) இரண்டு கூற்றும் சரி ஈ) இரண்டு கூற்றும் தவறு
10. பொருந்தாத ஒன்றை தேர்ந்து எடுக்கவும்
    அ) ஏற்றுமதி ஆ) மொத்த வியாபாரம் இ) இறக்குமதி ஈ) மறுஏற்றுமதி

பிரிவு – II

குறிப்பு: ஏதேனும் ஐந்து கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 17 ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும். **(5*2=10)**

11. குறு நிறுவனங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
12. மறு ஏற்றுமதி என்பதன் பொருள் யாது?
13. சில்லறை விற்பனையாளர் வரையறு.
14. மடங்குக் கடையின் பொருள் யாது?
15. பன்னாட்டு வணிகம் என்றால் என்ன?
16. நாணய உறுதிக் கடிதம் என்றால் என்ன?
17. உங்கள் ஊரில் உள்ள சில்லறை விற்பனை நிலையங்களின் பெயர் தருக.

பிரிவு – III

குறிப்பு: ஏதேனும் ஐந்து கேள்விகளுக்குப் பதிலளிக்கவும். வினா எண். 24ற்கு கட்டாயமாக பதிலளிக்கவும். **(5*3=15)**

18. தமிழ்நாட்டில் குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை பட்டியலிடுங்கள்.
19. இந்தியாவின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் மூன்று உதாரணங்களைத் தருக.
20. மொத்த விற்பனையாளர்களின் ஏதேனும் மூன்று பண்புகளை விளக்குங்கள்.
21.. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்களைக் விளக்குக. (ஏதேனும் 3)
22. சுய உதவிக் குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பு இயல்புகளை விவரி?
23. கப்பல் தலைவர் இரசீது என்றால் என்ன?
24. ஒரு புறம் உற்பத்தியாளர்கள் மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகள், மறுபுறம் நுகர்வோர் இவர்களுக்கு இடையிலான வணிக நடவடிக்கைகள் _______________ எனப்படும்.

பிரிவு – IV

குறிப்பு: அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கவும் **(2*5=10)**

25. சுய உதவிக்குழுக்களின் நோக்கங்களை விவரி. (ஏதேனும் 5) (அல்லது)
    உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 5)
26. துறைவாரிப் பண்டகசாலையின் சிறப்பு இயல்புகளை விவரி. (அல்லது)
    உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?. (ஏதேனும் 5)